ருஹுண பல்கலைக்கழகம் - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ருஹுண் பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் ்ொழிப்பாக்கப்பட்ட முக்கியமன கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்க வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவுகளின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, நிறுவனத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அறிக்கை முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் பல்கலைக்கழகத்தை தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்படுகின்றன. தவறுதலாக தெரிவிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக குறிப்பிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் இல்லையாயினும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு தொடர்பான தெளிவொன்றை பெற்றுக்கொண்டேன்.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமானதாகவும் உட்சேர்க்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் வெளிப்படுத்தல்கள் அடங்கிய நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்வைப்பும் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும
.

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலையம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

குறித்த நியமங்களுடன் தொடர்பான இணக்கமின்மை	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீட்டின் போது அச்சொத்துக்கள் வகுப்பினை முழுமையாக மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் பல்கலைக்கழகத்திடமுள்ள 51 வாகனங்களின் ரூபா 18,800,000 கூட்டுக் கிரயமான 05 வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. வளவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள வீதி முறைமைகள், மல அகற்றும் முறைமை, நீர்க் குழாய்கள் மற்றுதம் தொடர்பாடல் உபகரணங்கள் முறைமை என்பன இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	மோட்டார் வாகனத்தை மீள்மதிப்பிடும் போது 31 - 2282 ஆம் இலக்க மோட்டார் வாகனம் திருத்த வேலைகளுக்காக கராஜில் இருந்தமையால் மதிப்பீட்டிற்கு உடப்படுத்த முடியவில்லை என்பதாகவும் முழுமை யாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட மற்றும் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட (Retired from active use) வாகனங்களை மீள் மதிப்பீட்டிற்கு தேவைப்படவில்லை எனவும் Research Vessel	இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

	ஆராய்ச்சிக் கப்பல் ஓட்ட நிலையில் இல்லை என்தால் மதிப்பீடு செய்ய முடியாதுள்ளதாக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது.	

1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பட்டப்பின் படிப்பு பட்டத்தை பெற்றுக் கொள்வதற்காக பல்கலைக்கழகத்துடன் உடன்படிக்கை மேற்கொண்டு வெளிநாடு சென்றிருந்த நான்கு விரிவுரையாளர்களினால் பல்கலைக்கழகத்துக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 38,032,179 ஆன தொகை உடன்படிக்கை மீரியமைக்காக பெறவேண்டிய கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	உடன்படிக்கை மற்றும் பிணைமுறி மீறியமையால் அறவிடப்பட வேண்டிய மீதி தொடர்பாக இரு தரப்பினரும் இணக்கப்பாட்டுக்கு வராததாலலும குறித்த தொகையின் அளவு மற்றும் கொடுப்பனவுக் காலம் நிச்சயமற்றதாக இருப்பதால் பெற வேண்டிய உடன்படிக்கை மீறல் நடைமுறை பொறுப்பாக நிதி கூற்றுக்களில் காண்பிக்கப்படவில்லை என்பதாக.	பிணை முறி உடன்படிக்கை மீறியமை காரணமாக அறவிடப்பட வேண்டிய பணத்தை திட்டவட்டமாக இனங் கண் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(ஆ)	நிதி நிலைமை கூற்றில் நடைமுறை அல்லா பொறுப்பில் உள்ளடக்கப்பட்ட நிர்மாணங்கள் மற்றும் மீண்டும் வேலைகளுக்கான உடன்படிக்கை 2020 ஆம் ஆண்டில் இரத்து செய்யப்பட்டிருந்த போதும் நிர்மாண ஒப்பந்த கம்பெனிக்குரியதாக நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 12,607,224 தொகையை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை காரணமாக நிறுத்தி வைத்த தொகை மற்றும் திரண்ட நிதியம் அத்தொகையினால் முறையே அதிகரித்தும் குறைவாகவும் காண்பிக்கப்பட்டிருந்தன.	மருத்துவ பீடத்தில் 12 மாடி கட்டிடத்தை அமைப்பதற்காக முதலாவது ஒப்பந்ததாரர்களால் உரிய நிர்மாணங்கள் தொடர்பாக பல்கலைக்கழகத்திற்கு எதிராக நடுவர் தீர்ப்பு வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன் அதன் தீர்ப்பு ஏற்பாடுகள் முடிவடையாததால் மற்றும் உரிய ஒப்பந்த தொகை தொடர்பாக இறுதி தீர்மானம் ஒன்றிற்கு வராததால் குறித்த நிறுத்தி வைத்தல் தொகை வருமானத்திற்கு கணக்கீடு செய்யப்படவில்லை என்பதாக	நிறுத்தி வைத்தல் பணத்தை வருமானத்திற்கு எடுப்பதற்கு அல்லது தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	பல்கலைக்கழகத்தின் பிரதான நூலகத்தின் நவீனப்படுத்தல் செயற்பாடு 2024 பெப்ரவரி 20 ஆம் திகதி முடிவடைந்து பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்பட்டு பயன்படுத்தப்பட்ட போதும் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 170,134,326 தொகை மூலதமாக்கப்படாமல் நடைமுறை வேலையின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.	நூலக கட்டிடம் இதுவரை கட்டிட கணக்கு மூலனமாக்கப்பட்டிருந்ததுடன் அதற்குரிய செலவிடப்பட்ட நவீனமயப்படுத்தல் கிரயத்தை மாத்திரம் மூலதனம் ஆக்குவதற்கு உள்ளதாகவும் கணக்காய்வின் கவனத்திற்கு குறிப்பிட விரும்புகிறேன்.	சொத்துகளுக்காக மேற்கொள்ளப்படுகின்ற சேர்த்தல்கள் உரிய பிரகாரம் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தால் வேண்டும

	நூலக கட்டிடத்திற்குரிய ரூபா 7,797,823 ஆன பெறுமானத்தேய்வினை கணக்கீடு செய்யப்படாமையால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 7,797,823 தொகை அதிகரித்தும் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 162,836,503 ஆலும் நடைமுறை வேலையின் பெறுமதி ரூபா 170,134,326 ஆலும் முறையே குறைத்தும் அதிகரித்தும் நிதி கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.	எனினும் மேற்படி விடயம் நிதிக்கூற்றுகளில் குறிப்புகள் மற்றும் கொள்கைகளின் கீழ் முறையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக	
(ஈ)	மருத்துவ பீடத்தின் வெளிநாட்டு மாணவர்களிடமிருந்து அறவிடப்பட்ட அடுத்த ஆண்டுக்கான ரூபா 10,304,462 தொகை அடுத்த ஆண்டுக்காக கிடைத்த வருமானமாக இனங் காண்பதற்கு பதிலாக ஆண்டின் வருமானமாக இனம் காணப்பட்டமை காரணமாக ஆண்டின் மிகை மற்றும் பிற்படப்பட்ட வருமானம் அந்த அளவினால் முறையே கூடுதலாகவும் குறைத்தும் நிதி கூற்றுகளில் காண்பிக்கப்பட்டு இருந்தன.	கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதாக.	ஆண்டிற்குரிய வருமானம் சரியாக இனங்காணப்பட்டு நிதி கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும்.

1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பெற வேண்டிய தொகை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
பல்கலைக்கழகத்தில் நிர்மாணிக்கப்பட்டு இருந்த தொலைபேசி கோபுரத்துக்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெளி தரப்பினரிடமிருந்து அளவிடப்பட வேண்டிய ரூபா 5,372,107 தொகையை அறவிடுவதற்கு 2025 மே 31 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மொபிடெல் நிறுவனத்துடன் ற்படுத்திக் கொள்ளப்பட்ட உடன்படிக்கை பிரகாரம் 02(1) பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் மொபிடெல் கோபுரத்திற்காக மின் கட்டணம் கொடுப்பனவு மொபில் நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப ்படுவதாகவும் இங்கு அறவீடு தொடர்பாக குறித்த தரப்பினருக்கு பல தடவை எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அறவிடப்பட வேண்டிய தொகையை விரைவில் அளவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும்.	நிலுவை கட்டணங்களையும் விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

1.7 அதிகாரத்தால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2020 ஆகஸ்ட் 17 ஆம் திகதி முதல் 2022 ஜூலை 31- ஆம் திகதி வரை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு	2020 ஆகஸ்ட் 17 ஆம் திகதி முதல் 2022 ஜூலை 31 ஆம் திகதி வரையான காலத்தில்	முறையான அங்கீகாரம் ஒன்று இல்லாமல் வெளிநாட்டு விடுமுறை

செய்யப்பட்டிருந்த நிதியாளரால் முறையாக வெளிநாட்டு விடுமுறையை அங்கீகரித்துக் கொள்ளாமல் 2022 ஏப்ரல் 17 ஆம் திகதி முதல் 2022 ஏப்ரல் 23 ஆந் திகதி வரையான காலப் பகுதியில் பல்கலைக்கழகத்தை பிரதிப்படுத்தி வங்காளதேசத்தில் இடம் பெற்ற செயலமர்வொன்றில் க்கு பங்குபற்றி இருந்தார் எனினும் இந்த நிதியாளரின் பல்கலைக்கழகத்து டனான ஒப்பந்த காலம் 2022 ஜூலை 31 ஆந் திகதி முடிவடைந்து இருந்த போதும் HUDDERSFIELD பல்கலைக்கழகத்தை பிரதிநிதித்துவப் படுத்தி 2022 செப்டம்பர் 08 முதல் செப்தம்பர் 16 வரை ஐக்கிய இராச்சியத்தின் பல்கலைக்கழகத்தின் BRITAE செயற்திட்டத்தின் கீழ் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த பயிற்சி தொடருக்காகவும் சமூகமளித்திருந்தார்.	ஏழாண்டு வருடாநத விடுமுறை அடிப்படையில் ஒப்பந்தத்தின் பேரில் நிதியாளர் பதவியில் சேவை புரிந்த உத்தியோகத்திடம் இருந்து 2022 ஏப்ரல் 17 ஆம் திகதி முதல் ஏப்ரல் 23 ஆம் திகதி வரை வங்காளதேசத்தின் நடைபெற்ற செயலமர்வுக்குரிய வெளிநாட்டு விடுமுறை அங்கீகரிக்கப்பட்டதற்கான எவ்வித ஆவண மொன்றும் அவரது தனிப்பட்ட கோவையில் இல்லை எனவும 2022.09.08 ஆந் திகதி முதல் 202.09.16 ஆம் திகதி வரை ஐக்கிய இராச்சியத்தின் HUDDERSFIELD பல்கலைக்கழகத்தின் BRITAE செயற்திட்டத்தின் மூலம் ஒழுங்கு செய்யப்பட்ட செயலமர்வொன்றிற்காக குறித்த நிதியாளர் பங்குபற்றியிருந்த போதும் நிர்வாக சபை பத்திரங்களில் அவரின் பெயர் உள்ளடக்கப்பட்டவில்லை என்பதும் இந்த செயலமர்வு நடைபெற்ற காலப்பகுதியில் நிதியாளர் இப் பல்கலைக்கழகத்தின் சேவையில் முடித்து மீண்டும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் சேவைக்கு அறிக்கை இட்டிருந்ததாக.	பெற்றுக் கொண்டமை தொடர்பாக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதுடன் செயற்திட்டத்திற்காக பெயரிடப்படாத உத்தி யோகத்தரை தொடர்பு படுத்திய பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணக்கமின்மைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணக் கோவை			
(i). நிதிப் பிரமாணம் 135 மற்றும் 138	கொடுப்பனவு உறுதிச் சீட்டுகளில்	2023.12.08 (II) நிதிக்குழு பரிந்துரை மற்றும்	முறைப்படி நிதி அதிகாரங்களை

		செலவினங்களை சான்றுறுதிப்படுத்தும் போது ரூபா 20 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட கொடுப்பனவுகள் தொடர்பான செலவினத்தை உறுதிப்படுத்துதல் நிதியாளரால் மேற்கொள்ள வேண்டிய போதிலும் அதற்கு முரணாக உதவி நிதியாளரால் ரூபா 20 மில்லியனை மிகைத்த மொத்தம் ரூபா 851,812,903 ஆன 12 உறுதி சீட்டுகளுக்காக ஒப்பந்த கொடுப்பனவுச் செலவினம் சான்றுறுதிப் படுத்தப்பட்டு இருந்தது.	2024/03/14 ஆம் திகதி நிர்வாக சபை அங்கீகாரத்துடன் பல்கலைக்கழகத்தின் 2024 ஆம் ஆண்டிற்காக நிதி பிரமாணம் 135 இன் பிரகாரம் நிதி கட்டுப்பாடு தொடர்பான செயல்பாடுகளை கையளிக்கும் போது உறுதிச்சீட்டுக்களில் செலவினத்தை சான்றுறுதிப் படுத்துதல் ரூபா 10 மில்லியன் வரை உதவி நிதியாளர் களுக்குளும் ரூபா 20 மில்லியன் வரை பிரதி நிதியாளரருக்கும் ரூபா 20 மில்லியனுக்கு மேற்பட்ட கொடுப்பனவிற்கு நிதியாளருக்கும் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்தது.	கையாளித்த இடம் பெற வேண்டும்.
(ii)	நிதிப் பிரமாணம் 502(2)	ரூபா 5,449 மில்லியன் கூட்டுத்தொகையான ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் ரூபா 57.1 மில்லியன் கூட்டுப்பெறுமதியான கற்பனை சொத்துக் களுக்குரிய சொத்துக்கள் பதிவேடு ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.	பல்கலைக்கழகத்திற்கு சொந்தமாக கணனி மயப்படுத்தப்பட்ட நிலையான சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையொன்று பராமரிக்கப்படுவதுடன் படுவதுடன் இதில் பல்கலைக்கழகத்தின் அனைத்து பிரிவுகளின் நிலையான சொத்துக்கள் உள்ளடக்கப்பட்டு நாளது வரையாக் கப்பட்டுள்ளதாக.	அனைத்து சொத்துக்கள் தொடர்பாக நாளதுவரையாக் கப்பட்ட தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
(iii).	நிதிப்பிரமாணம் 571	நிதி நிலைமை கூற்றில் நடைமுறை பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்ட நிர்மாணங்கள் மற்றும் வேலைகளுக்கான மற்றும் வழங்குனர்களுக்கு செலுத்த வேண்டிய நீண்ட காலமாக இருந்து வரும் ரூபா 43.68 மில்லியன் நிறுத்தி வைத்தல் மீதிகள் தொடர்பாக மீளாய்ண்டு இறுதி திகதி வரையிலும்	இந்நிர்மாணங்களில் இருந்து ஒரு பகுதி உயர் கல்வி அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்படும் செயற் திட்டங்களாக இருந்ததுடன் இச்செயற்திட்டங்களின வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் ஆதலால் செயற்திட்டங்களின் 10% நிறுத்திவைத்தல் பணத்தை விடுவிக்க முடியாமல் இருப்பதுடன் எஞ்சிய நிர்மாணங்களில்	பிடிக்காசு உரிய காலப் பகுதியில் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

		நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	குறைபாடுகளை சரிசெய்துத பல்கலைக்கழகத்துக்கு வழங்காததன் அடிப்படையில் நிறுத்தி வைத்தல் பிடித்துக் கொள்ளப்பட்டுள்ளதாக.	
(ஆ)	2018 செப்டம்பர் 18 ஆம் திகதிய முயற்சிகள் சுற்றறிக்கை 01/2018	மோட்டார் வாகனங்கள் சொத்துக்கள் விற்பனையால் கிடைத்த ரூபா 5.203 மில்லியன் தொகை 5 ஆண்டு காலத்திலிருந்து திரட்டு நிதியத்துக்கு செலவு வைப்பதற்கோ அல்லது குறித்த சொத்துக்களை கொள்வனவு செய்வ தற்கோ பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை.	வாகனங்கள் விற்பனையால் கிடைத்த பணத்தை குறித்த ஆண்டுகளில் திரட்டு நிதியத்திற்கு அனுப்பப்படாதிருந்த துடன் 2003 முதல் 2019 ஆம் ஆண்டுகள் வரையில் கிடைத்த பணமாகும். இதுவரை அப்பணம் பல்கலைக் கழகத்திற்கு சொந்த மான வாகனங்களை திருத்தம் செய்வ தற்காக தற்போதும் பயன்படுத்தப்படுகின்றன ஆகையால் குறித்த பணம் பல்கலைக் கழகத்தின் வாகன பராமரிப்பு நடவடிக்கை களுக்காக பயன்படுத்து வதற்கு திறைசேரியின் இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு 2025 ஆம் ஜூலை மாதம் அளவில் நடவடிக்கை எடுப்பதாதாக	பொறுப்புக்களிலிரு ந்து விடுபடுவதற்கு அல்லது பொருத்தமான நடைமுறைகளை எடுப்பதற்காக தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்
(இ)	2016 மார்ச் 01 ஆம் திகதிய 04/2016 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை	செலுத்த வேண்டிய கணக்குகள் மற்றும் பிற்போடப்பட்ட வருமானங்களின் கீழ் காண்பிக்கப்பட்டு முடிவடைந்த சுயநிதி உழைப்பு பாடநெறிகளில் இருந்து உழைத்த 34.74 மில்லியன் வருமானம் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதி வரையிலும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.	இறுதி பாடநெறிகளில் உரிய நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டு நிதிக் குழுவின் அங்கீகாரம் மற்றும் நிர்வாக சபையின் அங்கீகாரத்தின் பேரில் உரிய மீதிகள் அபிவிருத்தி நிதியங்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டு தீர்வு செய்யப்பட்டு 2025 ஜூலை 31 இற்கு முன்னர் பூர்த்தி செய் வதற்கு தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள் ளப்பட்டுள்ளதாக	பூர்த்தி செய்யப்பட்ட பாடநெறிகளின் நிதிக் கூற்றுக்களை விரைவில் தயாரித்து நிர்ணயிக்கப்பட்ட நிதியங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

(ஈ)	2017 மார்ச் 2017/24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் 5 ஆம் பிரிவின் இரண்டாவது உப பிரிவு	ஊழியர்களின் வருமானத்தின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யப்படும் (PAYE) வருமான வரியை கணக்கீடு செய்யும் போது 04 மதிப்பீட்டு வருடங்களில் (2019-2022) பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்களில் 1708 ஊழியர்களிடம் இருந்து பரிசோதனை மற்றும் ஆராய்ச்சி படிகளின் மொத்தம் ரூபா 686.5 மில்லியன் தொகையான வரி அறவிடக்கூடிய வருமானம், மதிப்பீடு செய்யும் போது கருத்துக்கொள்ளாமையால் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய பாரியளவு வரி வருமானம் ஒன்று இழக்கப்பட்டிருந்தது.	2020/04/01: ஆந் திகதி முதல் தொழில் வழங்குனரால் தொழிலாளருக்கு சம்பளம் கொடுப்பனவு செய்யும் போது சம்பளத்திலிருந்து தனிப்பட்ட முற்பண வரி அறவிடும் போது வரி அறவிடுவதற்கான விருப்பத்தை தெரிவித்தல் அடிப்படையில் அறவிட வேண்டியுள்ளதுடன் இந்நிலைமை 2022/12/312 இல் இருந்தது அமுலாகின்றது. 2023.01.01 ஆந் திகதி முதல் முறைப்படி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் படிகள் உட்பட வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு தொடர்ச்சியாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக	உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க உழைக்கும் போது செலுத்தும் வரி கணிப்பீடு செய்யப்பட வேண்டும்

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,286,227,217 ஆன மிகையொன்றாக இருந்துடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் மிகை ரூபா 1,000,772,789 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 285,454,428 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மீண்டெழும் செலவினம் மற்றும் மூலதன மானியம் அதிகரித்தை, பரிமாற்றல் கொடுக்கல் வாங்கலகளில் இருந்து கிடைத்த வருமானம் மற்றும் பிரயாணச் செலவினம், வழங்கல் மற்றும் நுகர்வுச் செலவினம், ஆராய்ச்சி மற்றம் அபிவிருத்தி செலவினம், சுயநிதியிடல் உழைப்பு செயற்பாடுகளுக்கான செலவினங்கள் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தன.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயற்பாட்டு வினைத்திறனின்மை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
பல்கலைக்கழகத்தின் நகர அபிவித்தி செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக மெத்தேவத்த அமைந்துள்ள பக்கி பணிக்கியா வயல், திகன்வல வயல் போன்ற பெயரிலான 12 ஏக்கர் வயல்	இது தொடர்பாக பல்கலைக்கழகத்தினால் மாத்தறை பிரதேச செயலகத்திற்கு 2024.03.07 ஆம் திகதிய கடிதத்தின்	காணியை கையேற்பதற்கோ அல்லது வைப்பினை மீள அறவிடுவதற்கோ தாமதம் இன்றி

காணிகள் அளவில் கையேற்கும் நடவடிக்கைகளை செய்வதற்காக ஆரம்ப தொகையாக ரூபா 500,000 தொகை 2017 மே மாதத்தில் மாத்தறை பிரதேச செயலகத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் அறிக்கை திகதி வரையிலும் அக்காணியை பல்கலைக்கழகத்திற்கு கையேற்பதற்கோ அல்லது அப்பணத்தை மீளப் பெற்றுக் கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.	மூலம் உரிய அறிவித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இத்தொகை பல்கலைக்கழகத்திற்கு கிடைக்க வேண்டியதாக இருப்பதால் நிதிக்கூற்றுகளைத் தயாரிக்கும் போது இப்பெறுமதி முற் கொடுப்பனவு வைப்புக்கள் (Pre – payment deposit) கீழ் சரியாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் மூன்று மாதங்களுக்குள் இத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக	நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

3.2 சிக்கனற்ற கொடுக்கல் வாங்கல்கள்

கணக்காய்வு அவதானிப்பு	**முகாமைத்துவத்தின் கருத்துரை**	**பரிந்துரை**
உயர்கல்வி செயற்திட்டத்தின் மற்றும் அபிவிருத்தையை வேகப்படுத்தும் செயற்திட்டத்தின் (AHEAD) கலாநிதி பட்டப்படிப்பு புலமைப் பரிசில் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் கலாநிதி பட்டம் ஒன்றை பின்பற்றுவதற்காக 07 விரிவுரையாளர்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 69.67 மில்லியன் மீளாய்வாண்டின் இறுதி திகதி வரையில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்யாமை காரணமாக மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.	கலாநிதி பட்டத்தை (Ph.D.) பூர்த்தி செய்வதற்கு தவறிய விரிவுரையாளர்களின் பிணை பொறுப்பு பெறுமதி மாதாந்த சம்பளத்தில் ரூபா 100,000 வீதம் அறவிடப்படுகின்றது மூன்று விரிவுரையாளர்கள் நிர்வாக சபையினால் சேவை கைவிட்டுச் சென்றதாக கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது இரண்டு விரிவுரையாளர்கள் இதுவரை பிணைப்பு பொறுப்பை கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் ஒரு விரிவுரையாளர் உடன்படிக்கை மற்றும் பிணை பெறுமதியை செலுத்துவதாக அறிவித்துள்ளதாக.	வெளிநாட்டு செயற்திட்டங்கள் மூலம் வழங்கப்படும் நிதியத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பிணை முறி மீறிய விரிவுரையாளர்களிடமிருந்து அப்பணத்தை விரைவில் அறவிடுவதற்கு முறையான வேலை திட்டம் ஒன்றை ஈடுபடுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.3 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
கல்வி அமைச்சின் பெறுகைக் குழு அங்கீகாரத்தின் பேரில் தனியார் ஒப்பந்த கம்பெனிக்கு செலுத்துவதற்கு இருந்த ரூபா 148,024,526 இல் 75 சதவீதத்திற்கு சமமான ரூபா 131,001,705 தொகைக்குரிய அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ளாமல் மற்றும் நிதி பல்கலைக்கழகத்திற்கு கிடைத்திருக்காதியில் ஒப்பந்தக்கார ருக்கு உப வேந்தர் அங்கீகாரத்தின் பேரில் மீளாய்வாண்டில் பெப்ரவரி மாதத்தின் போது பல்கலைக்கழக நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. .	உபவேந்தரின் மேவுகை பேரில் கல்வி அமைச்சின் பெறுகை குழு அங்கீகாரம் கிடைக்கும் வரை இந்த 75% விலை விலகல் 2024.02.05 ஆம் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டது. இவ்விலை விலகளுக்காக 2024.03.18 ஆம் திகதி கல்வி அமைச்சரின் பெறுகை குழு அங்கீகாரம் வழங்கியுள்ளதாக	முறையான அங்கீகாரம் ஒன்று இல்லாமல் எந்த ஒரு கொடுப்பனவும் மேற்கொள்ள கூடாததுடன் உரிய கொடுப்பனவு வெளிப்படையாக மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.